**மனிதவள மேம்பாட்டு நிறுவகம் - 2017**

கொழும்பு பல்கலைகழகத்துடன் இணைந்த மனிதவள மேம்பாட்டு நிறுவகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைகழகங்கள் அதிகாரச் சட்டத்தின் உபபிரிவு 107(5) இன் 18 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டுள்ள 1979 இன் 11 ஆம் இலக்க மனித வள முன்னேற்ற நிருவக நெறிமுறைகளின் பிரிவு 23 மற்றும் பல்கலைக்கழகச் சட்டத்தின் 108(1) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(1) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மற்றும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் 111 ஆம் பிரிவு கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து, கொழும்பு பல்கலைக் கழகத்துடன் இணைந்து மனிதவள மேம்பாட்டு நிறுவகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்**

**இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02**

காசுப் பாய்ச்சல் கூற்றில் தொழிற்படு மூலதன மாற்றங்களின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 316,565 இற்கான வைப்பு பணம் உள்பாய்ச்சலின் கீழ் ரூபா 1,838,400 தொகை பெறுமதியான நூலக வைப்புகளின் பெறுமதியும் உட்படுத்தப்பட்டிருந்தன. அவ்வாறு இருக்கும் போது மீண்டும் அப் பெறுமதி நூலக வைப்பு பணம் உள்பாய்ச்சல் என தொழிற்படு மூலதன மாற்றங்களின் கீழ் சீராக்கல் செய்யப்பட்டிருந்தமையால் செயற்பாட்டு தொழிற்பாடுகளின் கீழ் தேறிய பணம் உள்பாய்ச்சல் அந்த பெறுமதியினால் மிகையாகக் காட்டப்பட்டுள்ளது. தேறிய பணம் உட்பாய்ச்சல் அதே பெறுமதியால் மிகையாக காட்டப்பட்டள்ளது.

**2.2.2 கணக்கீட்டு கொள்கைகள்**

கணணிகள் மென் பொருள் அருவச் சொத்துக்கள் என இனங்கண்டு கணக்கீடு செய்வதாகும். காலத்தேய்மானம் செய்வதற்கும் நிறுவனத்தினால் கணக்கீட்டு கொள்கையொன்று இனங்கண்டிருக்காததுடன் நிலையான சொத்துக்களின் கீழ் வருடாந்தம் 20 சதவீம் பெறுமானத் தேய்வு கழித்திருந்த போதிலும் பெறுமானத்தேய்வு விதிகதம் நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. எவ்வாறாயினும், பெறுமானத் தேய்வு அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு ஆண்டிற்கான பெறுமானத் தேய்வு ரூபா 252,257 தொகை எனினும் நிதி செயலாற்றுகை கூற்றில் அப் பெறுமதி ரூபா 448,257 தொகை என காட்டப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூலதன மானியங்களில் இருந்து தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொல்வனவு செய்வதற்காக ரூபா 7,473,859 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் செலவு செய்யப்படாத மூலதன கணக்கில் இருந்து செலவு செய்யப்பட்ட மூலதன கணக்கிற்கு ரூபா 7,607,891 தொகை செலவு வைக்கப்பட்டிருந்தமையால் செலவு செய்யப்பட்ட மூலதன கணக்கு ரூபா 134,032 இனால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) பெறுமானத் தேய்வு அட்டவணையின் பிரகாரம் வாகனங்களுக்காக ஆண்டிற்கான பெறுமானத் தேய்வு பெறுமதி ரூபா 2,949,375 தொகை எனினும் நிதி செயலாற்றுகை கூற்றில் ரூபா 724,375 தொகை எனக் காட்டப்பட்டிருந்தது.

(இ) முற்றாக பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்ட சொத்துகளுக்காக காலத் தேய்மானம் கணிப்பதற்கு முடியாது எனினும் நிறுவனத்தினால் முற்றாக பெறுமனத் தேய்வு கழிக்கப்பட சொத்துக்கள் மீண்டும் மீள் மதிப்பீடு செய்து அந்த மீள்மதிப்பீட்டின் பெறுமதி மீது மீண்டும் காலத் தேய்மானம் கணிக்கப்பட்டிருந்தது. அதனால் காலத்தேய்மானம் பெறுமதி மற்றும் செலவிடப்பட்ட முலதன மானியக் கணக்கின் மீதி சரியானதாக காணப்படவில்லை.

(ஈ) 2017 ஆண்டளவில் முற்றாக பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டிருக்காத இரண்டு வாகனங்களுக்காக காலத் தேய்மானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) 2017 ஆண்டு தொடர்பாக ரூபா 1,557,168 இற்கான செலவுகள் 2018 ஆண்டின் போது செலுத்தியிருந்த போதிலும் இப் பெறுமதி அடடுறு செலவுகள் என இனங்கண்டிருக்காமையால் ஆண்டிற்கான மிகை அப் பெறுமதியில் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

## 2.3 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங் கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 1985 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்தின் 10 ஆம் பிரிவு மற்றும் 16 ஆம் பிரிவு மற்றும் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டத்தின் 16 ஆம் பிரிவு | நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களுக்காக உரிய தினங்களில் பங்களிப்புத் தொகை செலுத்தியிருக்காமையால் இரண்டு ஆண்டுகள் தொடர்பாக ஊழியரினால் செலுத்தப்பட வேண்டிய 8 சதவீதம் பங்களிப்புத் தொகை மற்றும் மிகை விதிப்பாகக் கூட்டுத்தொகை ரூபா 8,982,751 தொகை மீளாய்வாண்டின் போது நிறுவகத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாண கோவை | |
| (i) | நிதிப் பிரமாணம் 110 | சேதங்கள் தொடர்பாக பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டும் எனினும் அவ்வாறான பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப் பிரமாணம் 371 மற்றும் 2015 யூலை 14 ஆம் திகதிய 03/2015 இலக்கம் கொண்ட பொது நிதி சுற்றறிக்கை | – முற்பணங்கள் வழங்குவது முற்றாக நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட வேண்டும் எனினும் நிறைவேற்று தரம் அல்லாத 14 உத்தியோகத்தர்களுக்கு 179 சந்தர்ப்பங்களின் கூட்டுப் பெறுமதி ரூபா 2,905,666 இற்கான முற்பணத் தொகையொன்று வழங்கப்பட்டிருந்தது.<br><br>– முற்பணம் குறிப்பிட்ட கருமத்தை விரைவாக முடித்து தீர்க்கப்பட வேண்டுமெனினும் 24 சந்தர்பங்களில் பெற்றிருந்த கூட்டுப்பெறுமதி 307,640 இற்கான முற்பணத்தை தீர்ப்பதில் 18 நாட்கள் முதல் 170 நாட்கள் வரையான கால தாமதமாகி இருந்தது. |
| (iii) | நிதிப் பிரமாணம் 751 மற்றும் 757 | மீளாய்வாண்டிற்கான பண்டக் கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் ரூபா 758,762 தொகை பெறுமதியான நிலையான சொத்துக்கள் பௌதீக ரீதியாக நிறுவகத்தில் காணப்படவில்லை எனவும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் அடங்காத ஆனால் பெறுமதி இனங்காணப்படாத 347 விடயங்கள் பௌதீக ரிதியாக நிறுவகத்தில் காணப்பட்டன என அவதானிக்கப்பட்டது. |
| (iv) | நிதிப் பிரமாணம் 756 (2) | வருடாந்த பண்டக் கணிப்பீட்டு குழு அங்கத்தவர்கள் இருவரைக் கொண்டிருக்க வேண்டும் எனினும் கணிணி விடயங்கள் தொடர்பாக கணிப்பிட்டு அறிக்கையின் பிரகாரம் ஒரு நபரின் பங்கு பற்றலுடன் மாத்திரம் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (v) | நிதிப் பிரமாணம் 770 | 2016 மற்றும் 2017 ஆண்டுகளின் பண்ட கணிப்பீட்டு சபையினால், பயன்படுத்த முடியாத அகற்றுவதற்கு விதந்துரைக்கப்பட்ட ரூபா 2,859,260 தொகை பெறுமதியான 04 வகையான பண்டங்கள் கணக்காய்வுத் திகதியாகிய 2018 ஜுன் 22 திகதி வரையும் அகற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. |
| (இ) | பல்கலைக்கழக தாபனக் கோவையின் xx அத்தியாயத்தின் பிரிவுகள் 3.1 மற்றும் 3.2 | நிறுவகத்தின் கல்விசார் மற்றும் கல்வி சாராத அனைத்து உத்தியோகத்தர்களும் உள்வருகை வெளிச் செல்லல் நேரங்களை பதிவு செய்ய வேண்டுமெனினும் கல்விசார் பதவியணியை சேர்ந்த 10 உத்தியோகத்தர்களின் வருகையை உறுதிபடுத்தாமல் ரூபா 36,786,564 இற்காக சம்பளம் மற்றும் படி செலுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஈ) | 2004 ஜுலை 29 ஆம் திகதி பீஎ்டீ / 25 இலக்கம் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் போது காணப்பட்ட ரூபா 155,451,216 இற்கான நிலையான வைப்புக்களுக்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. |
| (உ) | 2004 ஜனவரி 26 ஆம் திகதியில் புச / 01 இலக்கம் கொண்ட தேசிய நூலக மற்றும் ஆவணப்படுத்தல் சேவைச் சபையின் சுற்றறிக்கை | 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக ரூபா 5,572,787 தொகை பெறுமதியான நூலக புத்தகங்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை. |

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்பித்திருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 42,996,700 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 61,576,424 தொகையாக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 18,579,724 இற்கான வீழ்ச்சி ஒன்றினை காட்டியது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக சம்பளங்கள் மற்றும் படிச் செலவுகள் ரூபா 25,094,713 இனால் அதிகரித்திருத்தல் மேற்கூறிய வீழ்ச்சிக்கு முக்கியமாக பாதித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆண்டில் காணப்பட்ட ரூப 15,174,119 இற்கான மிகை தளம்பலுடன் 2017 ஆண்டளவில் ரூபா 42,996,700 தொகை ஆக இருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் வேதனம், பெறுமானத் தேய்வு மற்றும் அரசுக்கு செலுத்திய வரி மீண்டும் சீராக்கல் செய்த பின்னர் 2013 ஆண்டின் போது ரூபா 49,810,791 தொகையான நிறுவகத்தில் பங்களிப்பு 2014 ஆண்டின் போது ரூபா 47,458,572 தொகை வரை 5 சதவீதத்தால் குறைந்திருந்த போதிலும் 2015 ஆண்டு முதல் இடையறாது வளர்ச்சியடைந்து மீளாய்வாண்டின் போது ரூபா 114,264,804 தொகை வரை வளர்ச்சி அடைந்திருந்தது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றுகை**

**4.1.1 செயல் ஆற்றல் மற்றும் மீளாய்வு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்தினால் நடாத்தப்படகின்ற 01 ஆரம்ப பட்டதாரி பாட நெறி (Undergraduate) 05 பட்டப் பின்படிப்பு பட்டதாரி பாடநெறி (Postgraduate) களும் 07 உயர் பாடநெறிகளும் (Executive/ Higher ) 10 டிப்ளோமா பாடநெறிகளும் (Diploma) மற்றும் 22 சான்றிதழ் பாடநெறிகளும் (Certificate) என ஒட்டு மொத்த 45 பாடநெறிகள் காணப்பட்டன. எனினும் 2017 ஆண்டிற்காக 36 பாடநெறிகளுக்கு மாணவர்கள் பதிவு செய்திருக்காததுடன் இவற்றில் 11 பாடநெறிகளுக்காக 5 வருடங்கள் முதல் மாணவர்கள் பதிவு செய்திருக்கவில்லை. எவ்வாறாயினும் மீளாய்வாண்டளவில் 45 பாடநெறிகளில் 22 பாடநெறிகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன் மாணவர்கள் சேர்ப்பதற்காக துணை விதிகள் மற்றும் பிரமாணங்கள் அங்கீகரிக்கும் வரை அந்த பாடநெறிகள் பிற்போடப்பட்டுள்ளதாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டது.

(ஆ) 2016 ஆண்டிற்கு ஒப்பாக 2017 ஆண்டின் போது பாட நெறிகளுக்காக பதிவு செய்திருந்த மாணவர்களின் எண்ணிக்கை 3816 இனால் குறைவடைந்ததுடன் அது 52 சதவீதத்தினால் குறைவடைதலாகும்.

(இ) மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிறைவேற்றப்பட வேண்டிய 54 செய்பணிகள் காணப்பட்டதுடன் ஆண்டின் போது நிறைவேற்ற முடியாமல் போன 19 கருமங்கள் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

(ஈ) நிறுவனத்தின் செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் 07 பிரதான குறிக்கோள்களின் கீழ் இலக்கு (Goals) மற்றும் தந்திரோபாயம் (Strategy) உட்படுத்தித் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் ஒரு குறிக்கோளுக்கான தந்திரோபாயங்களுக்காக மாத்திரம் பாதீட்டு மதிப்பீடு காட்டப்பட்டிருந்தது. ஏனைய குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக பாதீட்டு மதிப்பீடு காட்டி இருக்கவில்லை.

(உ) வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்துடன் மனித வளங்கள் அபிவிருத்தி திட்டம் தயாரித்து சமர்பித்திருக்கவில்லை.

(ஊ) நிறுவனத்தினால் சமர்பிக்கப்பட்டிருந்த முன்னேற்ற அறிக்கை செயல் நடவடிக்கை திட்டத்திற்கு இணங்க தயாரித்திருக்காததுடன் அதன் கருமங்கள் நிறை வேற்றப்பட்ட காலப்பகுதி மற்றும் செலவிடப்பட பணம் தொடர்பாக குறிப்பிட்டிருக்கவில்லை அதன் காரணமாக செயல் நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிட்டுள்ள கடமைகள் திட்டமிட காலப்பகுதிகளில் மற்றும் மதிப்பீட்டு செலவு வரையரையுள் நிறைவேற்றப்பட்டதா என உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**4.2 பதவியணி நிருவாகம்**

நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பதவிகளின் எண்ணிக்கை 98 ஆக காணப்பட்டதுடன், உள்ளவாறான பதவியணி 73 ஆக காணப்பட்டமையால் வெற்றிடங்களின் எண்ணிக்கை 25 ஆகும். அங்கீகரிக்கப்பட்ட பதவியணிப் பதவிகளில் வெற்றிடங்களுக்காக நிரந்தர உத்தியோகத்தர்கள் சேர்க்கப்படாமல் 2017 ஆண்டின் போது ஒப்பந்த அடிப்படையில் 25 நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களும் வேலை உதவியாளர் ஒருவரும் ஆக 26 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

**5. நிலைபேறான அபிவிருத்தி**

**5.1 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை நெருங்குதல்**

2017 ஆகஸ்ட் 14 திகதி என்ஜி / எஸ்பீ / எஸ்டீஜி / 17 கொண்ட தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு செயலாளரினால் வெளியிடப்பட சுற்றறிக்கை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு நிகழ்ச்சி நிரல் இன் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களிளும் செயற்பட வேண்டுமெனினும் மீளாய்வாண்டு தொடர்பாக மனிதவள முன்னேற்ற நிறுவகத்தினால் தனது நோக்கெல்லையின் கீழ் வரும் கருமங்கள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக அறிந்திருக்கவில்லை.

**6. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**6.1 நிதிக் கூற்றுக்கள் சமர்பித்தல்**

2003 ஜுன் 02 திகதி பீஈடீ / 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 பந்தியின் பிரகாரம் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் நிதி ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பிக்கப்பட வேண்டுமெனினும் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 மே 04 திகதி சமர்பிக்கப்பட்டிருந்தது.

**6.2 பெறுகை**

---------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 பந்தியின் பிரகாரம் பெறுகை திட்டத்தில் தொடர்ந்து வரும் வருடத்திற்கான பெறுகை அலுவல்கள் விரிவாக தயாரித்திருக்காததுடன் திட்டத்தில் ஏற்படும் மாற்றங்களை மீளாய்வு செய்து அடிக்கடி நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பெறுகை திட்டத்தில் அடங்கியுள்ள ரூபா 13,635,350 தொகை பெறுமதியான பண்டங்கள் , 08 வேலைகள் மற்றும் சேவைகள் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்பட்டிருக்காததுடன் பெறுகைகள் திட்டத்தில் அடங்கியிருக்காத ரூபா 974,562 தொகை பெறுமதியான 12 கருமங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தன.

(இ) பெறுகை திட்டத்தில் அடங்கியுள்ள 02 பெறுகை விடயங்களுக்காக மதிப்பீட்டு தொகையை மிகைத்து ரூபா 3,444,809 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டிருந்ததுடன் அதன் முரண் 134 சதவீதமாகும்.

**6.3 பாதீட்டு கட்டுபாடு**

--------------------------------

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் உள்ளவாறான பெறுமதிகளை இணக்கஞ் செய்த போது வருமானம் ரூபா 72,363,395 இனால் அதாவது 44 சதவீதத்தினால் முரண்பட்டுக் காணப்பட்டதுடன் ஏனைய செயற்பாட்டு செலவுகள் ரூபா 45,902,486 இனால் அதாவது 94 சதவீதத்தினால் முரண்பட்டிருந்தது.

**6.4 உள்ளக கணக்காய்வு**

----------------------------------------

கொழும்பு பல்கலை கழகத்தின் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் மனித வள முன்னேற்ற நிறுவனத்தின் உள்ளக கணக்காய்வு மேற் கொள்ளப்பட்டிருந்தது. 2017 ஆண்டு தொடர்பாக சமர்பித்திருந்த உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சி திட்டத்தின் பிரகாரம் 2017 ஆண்டின் போது நிறுவனத்தினால் 13 விடயங்களை கணக்காய்வு செய்வதற்காக திட்டமிட்டிருந்த போதிலும் அவற்றில் இரண்டு விடயங்கள் மாத்திரம் கணக்காய்வு செய்திருந்தமையால் நிறுவகத்தில் போதியளவு உள்ளக கணக்காய்வு ஒன்று நடைபெற்றிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

**6.5 தீர்கப்படாத கணக்காய்வு பந்திகள்**

---------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படகின்றன.

(அ) நிறுவனத்தினால் 2014 ஆண்டின் போது ஊடாக மற்றும் செவிமடுத்தல் பார்வை சார்ந்த வடிவமைத்தல் டிப்ளோமா ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் இந்த பாடநெறிகள் நடாத்துவதற்காக நிறுவனத்தில் விஷேடத்துவ அறிவு உடைய விரிவுரையாளர்கள் காணப்படாமையால் 2014 ஆண்டின் பின்னர் பாடநெறிகளுக்காக மாணவர்கள் சேர்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஜுன் 01 திகதி கொழும்பு பல்கலைக்கழகத்தின் புதிய கலை அரங்கில் நடைபெற்ற டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் விழாவிற்காக பயன்படுத்தப்பட்ட நிறுவனத்திற்கு சொந்தமான ரூபா 69,900 தொகை பெறுமதியான மடிகணினி காணாமல் போயிருந்ததுடன் அது தொடர்பாக முறையான விசாரணை ஒன்று மேற்கொண்டு நிறுவனத்திற்கு ஏற்பட்டிருந்த நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) நிறுவகத்தில் நிருவாக மற்றும் கல்வி அலுவல்களுக்காக நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடம் அமைந்துள்ள 27.86 பர்சஸ் காணி கொழும்பு பல்களைகழகத்திற்கு சொந்தமானதுடன் அந்த காணியின் உரிமையை உரித்தாக்கி பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**7. முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமை மற்றும் கட்டுபாடுகள் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) பாதீட்டு கட்டுபாடு | பாதீட்டை அடிக்கடி மீளாய்வு செய்து ஆக்கபூர்வமான கட்டுபாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்படாமை. |
| (ஆ) முதலீட்டு முகாமைத்துவம் | முதலீடுகள் தொடர்பாக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றிருக்காமை. |
| (இ) பெறுகை | பெறுகை திட்டம் நாளதுவரை பேணப்படாமை |
| (ஈ) வாகனக் கட்டுபாடு | வாகனங்களின் எரிபொருள் நுகர்வு தொடர்பாக பரிசோதனை செய்யாமை, வாகனங்கள் தொடர்பான விபரங்கள் அடங்கிய பதிவேடு ஒன்று பேணப்படாமை, வாகனங்கள் தொடர்பாக கணிப்பீடு மேற்கொள்ளாமை, ஓட்ட அட்டவணைகள் மற்றும் பிரயாணங்கள் தொடர்பான மாதாந்த பொழிப்புகளில் தகவல்கள் உட்படுத்தப்படாமை. |
| (உ) பாடநெறிகள் நடாத்துதல் | துணை விதிகள் மற்றும் பிரமாணங்களை அங்கீகரிக்காமல் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டிருத்தல். |